3rd April 1965]

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: 'பிளேக்' தடுப்புப் பணிக்காகவே நியமிக்கப்பட்ட சிறப்புப் பயிற்சிப் பணியாளர்கள் 1964-65-ல் கிருஷ்ணகிரி, ஓசூர் வட்டங்களில் பிளேக் தடுப்பு வேலைகளை ஒழுங்காகவும், முறையாகவும் மேற்கொண்டனர். இந்த வட்டங்களில் உள்ள வீடுகளிலே எலி வளைகளிலும், மற்ற எலிப் பொந்துகளிலும் சயானோகாஸ் 'ஏ' டஸ்ட் (Cyanogas 'A' dust) புகை செலுத்தப்பட்டதுடன், 10 சதவீத BHC டஸ்டும் தூவப்பட்டது.

Rebate on sale of Khadi

* 437 Q.—SRI M. V. KARIVENGADAM: Will the Hon. the Minister for Co-operation be pleased to state the amount of special and ordinary rebate granted so far, during 1963–64 for the sale of Khadi in the State?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI-MANRADIAR: The amounts of rebates granted by the Khadi and Village Industries to the State Khadi and Village Industries Board during 1963–64 are given below:—

Ordinary rebate—Rs. 17,48,531·52.

Special rebate—Rs. 3,45,648·40.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை: ஏப்ரல் முதல் தேதியிலிருந்து இந்தக் காதிக்குக் கொடுக்கிற ரிபேட்டை நிறுத்துவதற்கு உத்தேசம் இருக்கிறதா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: இதை வில்லேஜ் லெவலிலே வரவேண்டுமென்று அதற்காகக் கொடுக்கிறார்கள். இப்பொழுது இது பாதிக்கின்ற அளவிலே ஒன்றுமில்லை.

Credit under Full Finance Scheme

* 438 Q.—SRI M. V. KARIVENGADAM: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) the amount of credit given under the Full Finance Scheme; and

(b) the number of Panchayat Unions in which the Scheme has so far been introduced?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) முழு நிதித் திட்டம் (Full Finance Scheme) அமுலிலுள்ள பஞ்சாயத்து யூனியன் பகுதிகளில் குறுகிய காலக் கடன்களாகவும், நடுத்தரக் காலக் கடன்களாகவும் மொத்தம் 47.33 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

(இ) முழு நிதித் திட்டம் இதுவரை 274 பஞ்சாயத்து யூனியன்களில் கொண்டு வரப்பட்டுள்ளது.